**3.6.2026**
**O.S. No.43/2024 (P.W - 2)**
பெயர் - நஞ்சன், த/பெ. திம்மாகவுடர்
விசாரணை தொடங்கும் நேரம்:- 12.10 PM
விசாரணை முடியும் நேரம் :- 12.25 PM
குறுக்கு விசாரணை :-

நான் எனது மகனும் வாதியுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தும் முன்பு பிரதிவாதியின் வீட்டிற்கு சென்று பார்வையிட்டோமா என்றால் பார்வையிட்டோம். நாங்கள் அங்கு சென்றபோது அங்கு வாடகைக்கு ஒரு நபர் குடியிருந்தார் என்றும் அவரை நாங்கள் விசாரித்து அவர் காலி செய்யும் தேதியை தெரிந்து கொண்ட பின்னர் தான் ஒப்பந்தத்தை ஏற்படுத்தினோம் என்று சொன்னால் சரிதான். எங்கு வைத்து யார் முன்னிலையில் அந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் மாதன் என்ற வழக்கறிஞரின் அலுவலகத்தில் வைத்து நான் என் மகள், மம்தா, ஜெயலட்சுமி ஆகியோர்கள் இருக்க ஏற்படுத்தப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் வழக்கறிஞரின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கறிஞரின் கையொப்பம் போடப்பட்டுள்ளது. எப்போது எவ்வளவு தொகையை பிரதிவாதிக்கு கொடுத்தோம் என்றால் 29.5.2023 அன்று ரூ.3,00,000/- ம் 5.6.2023 அன்று ரூ.1,50,000/- ம் கொடுத்தோம். நான் 2 வது முறையாக ரூ.1,50,000/- கொடுத்தபோது வாடகை தாரர் அங்கு குடியிருந்தாரா என்றால் இல்லை. சாவியை பெற்ற பின்னர் நான் ரூ.1,50,000/- ஐ கொடுத்தேனா என்றால் இல்லை. பணத்தை கொடுத்த பின்னர் பிரதிவாதி சாவியை கொண்டுவந்து தருவதாக கூறினார். ரூ.1,50,000/- கொடுத்தபோது அங்கு யார் யார்

இருந்தார்கள் என்றால்  நான் என் மகள், மம்தா, ஜெயலட்சுமி மற்றும் சாந்தி என்பவரும் அங்கு  இருந்தோம். நான்  ரூ.3,00,000/- ஐ கொடுத்ததை வழக்கறிஞருடன் சேர்த்து 4 நபர்கள் பார்த்தார்களா என்றால் ஆமாம். 5.6.2023 அன்று ரூ.1,50,000/- ம் கொடுத்ததற்கு யாராவது சாட்சி கையொப்பம் செய்தார்களா என்றால் இல்லை. பிரதிவாதி என் மகளிடம் ரூ.1,00,000/- கடனாக பெற்றிருந்தார் என்றும் அதற்கு ஜாமினாக வெற்று கடனுருதி சீட்டுகளும் முத்திரைத்தாளிலும் கையெப்பம் செய்து கொடுத்திருந்தார் என்றும் அதை தவறாக பயன்படுத்தி போகிய ஒப்பந்ததை ஏற்படுத்தி என் மகள் தவறாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் வழக்கறிஞர் அலுவலகத்தில்வைத்து ஒப்பந்தம் ஏற்படுத்தியிருந்தால் ஒப்பந்தத்தில் வழக்கறிஞர் கையொப்பம் செய்திருப்பார் என்றும் அங்கு வைத்து தயார் செய்யப்படாத காரணத்தினால் தான் வழக்கறிஞர் கையொப்பம் ஒப்பந்தத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 5.6.2023 அன்று ரூ.1,50,000/- ம் கொடுத்திருந்தால் அங்கு இருந்ததாக சொல்லப்படும் சாந்தியிடம் நான் சாட்சிகையொப்பம் வாங்கியிருப்போன் என்று சொன்னால் சரியல்ல. வாடகைக்கு ஒரு நபர் குடியிருக்கும் நிலையில் யாரும் அந்த வீட்டிற்கு போகிய ஒப்பந்தம் ஏற்படுத்த மாட்டார்கள் என்றும் வாடகைக்கு இருப்பவர் காலிசெய்யும் முன்னரே சாவியை வாங்காமல் பாக்கிதொகையை முழுமையாக கொடுக்கமாட்டார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. கடனுக்காக கொடுக்கப்பட்ட கையொப்பமிட்ட வெற்று முத்திரைத்தாகளை பயன்படுத்தி போகிய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான்

என் மகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் உண்மையில் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அதன் சாட்சிகளான சாந்தி, ஜெயலட்சுமி ஆகியோகளை இவ்வழக்கின் சாட்சிகளாக என் மகள் விசாரித்து இருப்பார் என்றும் சொன்னால் சரியல்ல.